*2023 ஏப்ரல் 17*]

*கலைஞர் அவர்களால் உத்தரவிடப்பட்டு, ஆரம்பிக்கப்பட்ட அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும். அந்தப் பகுதி சிறுபான்மையினர் அதிகம் வசிக்கின்ற பகுதியாகும். அங்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ராஜகம்பீரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்று ராஜதந்திரத்தோடு ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்; கடந்த 7, 8 ஆண்டுகளுக்குப் பிறகு, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, தற்போது அரசாணை வெளியிடப்பட்டு, 25 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 25 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தற்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீண்டும் தேவையானவற்றை கேட்டுப் பெறுகின்ற நிலையில், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். அப்படிக் கிடைக்கப்பெறும்போது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 167, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**167—**

## சார்நிலைக் கருவூலம்

***82623—திரு. செ. கிருஷ்ணமுரளி:**

*மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் சார்நிலைக் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பது தொடர்பாக கருவூலக் கணக்கு ஆணையரகத்திடமிருந்து கருத்துரு வரப்பெற்று, அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், கருவூலக் கணக்குத் துறையின் மறுசீரமைப்பிற்குப் பிறகு, கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பது தொடர்பாக உரிய நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி அவர்கள்.*

**திரு. செ. கிருஷ்ணமுரளி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக பொதுச் செயலாளர் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி, கடையநல்லூரில் சார்நிலைக் கருவூலம் அமைப்பது தொடர்பாக ஒரு கேள்வி கேட்கப்பட்டுள்ளது. அம்மாவின் கடந்தகால ஆட்சியில் மூன்று தாலுகாக்களைப் பிரித்து, தனி தாலுகாவாக 40 ஆண்டுக் கால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அறிவிக்கப்பட்ட அந்தத் தாலுகாவில் இரண்டு நகராட்சிகள், மூன்று பேரூராட்சிகள், 25 கிராம ஊராட்சிகள் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்துருக்கள் பெறப்பட்டு, பரிசீலனையில் இருக்கிறது என்று கூறியிருக்கிறார். வெகு விரைவாக சார்நிலைக் கருவூல அலுவலகத்தை அமைத்துத் தந்து, அந்த மக்களுக்குப் பயனுள்ளதாக அமைய வழிவகை செய்து தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.*

*2023 ஏப்ரல் 17*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சீர்திருத்தங்களை ஏற்கெனவே செய்த பிறகும் இன்னும் பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளன. உதாரணத்திற்கு, நாளை மறுநாள், நிதித் துறை மானியக் கோரிக்கையை இங்கே சமர்ப்பிக்கும்போது, பல அறிவிப்புகள் இன்னும் வரவிருக்கின்றன. எந்த அளவிற்கு* Automation, Online, Mobile App *எல்லாவற்றிலும் அரசை நேரடியாக மக்களும், பல அலுவலர்களும் அவர்களுடைய பணிகளை நேரில் வராமல் செய்துகொள்ள முடியும் என்பதற்காக ஏற்கெனவே அறிவித்ததற்குமேல் இன்னும் சில மாற்றங்களைச் செய்து வருகிறோம். எனவே, அந்தப் புதிய* Model*-ஐ உருவாக்கிய பிறகு, எங்கெல்லாம் கூடுதலாக இருக்கிறது, எங்கெல்லாம் குறைவாக இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி அவர்கள்.*

**திரு. செ. கிருஷ்ணமுரளி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை தாலுகா அலுவலகத்திலுள்ள இந்தக் கருவூலமானது 100 ஆண்டுகள் பழமைவாய்ந்த கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கே கூடுதல், எங்கே குறைவு என்று கண்டறிந்து* overall *மறுசீரமைப்பு செய்யவிருக்கிறோம். உதாரணத்திற்கு ஒரு* payment process *செய்வதற்கு பழைய காலத்தில் இருந்த* model*–ல் 9 தனி நபர்கள்* approval *கொடுக்கிறார்கள். தற்போது* online *ஆன பிறகு இவற்றையெல்லாம்*

திருத்த வேண்டும். எனவே, அந்த மொத்த model–யும் திருத்தும்போது, எங்கெல்லாம் குறைவாக இருக்கிறதோ, உறுதியாக அது பணியாளர்கள் எண்ணிக்கையாக இருக்கட்டும் அல்லது கட்டடமாக இருக்கட்டும், எவையெல்லாம் குறைவாக இருக்கிறதோ, கருவூலம் சரியாகச் செயல்படுவதற்கு என்னென்ன தேவையோ, அவை அனைத்தையும் இந்த அரசாங்கம் செய்து தரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. ட்டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதியில், தேன்கனிக்கோட்டை தாலுகாவிலிருந்து அஞ்சட்டி தாலுகாவை புதிதாக பிரித்த பிறகு, அங்கே சார்நிலைக் கருவூலம் இல்லை. 120–க்கும் மேற்பட்ட மலை கிராமங்களைச் சார்ந்த பொது மக்கள் தேன்கனிக்கோட்டை சார்நிலைக் கருவூலத்திற்கு வர வேண்டியிருக்கிறது. ஆகவே, புதிதாகப் பிரிக்கப்பட்ட அஞ்சட்டி தாலுகாவிற்குப் புதியதாக சார்நிலைக் கருவூலம் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கருத்து மீண்டும் மீண்டும் வருவதால், நான் சில கருத்துகளை இங்கே கூற விரும்புகிறேன். ஏற்கெனவே பல ஆண்டுகளாக கடனிலும், நிதிப் பற்றாக்குறையிலும், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையிலும் அரசு இயங்கிக்கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கையிலிருக்கிற நிதியை வைத்து, முதல் முக்கியத்துவம் நாம் கொடுக்க வேண்டியது, குளங்கள், ஏரிகள் தூர்வாருவது; குடி தண்ணீர்த் திட்டங்கள் உருவாக்குவது; சாலைகள் அமைப்பது; பாலங்கள் அமைப்பது; அதற்கடுத்தபடியாக மக்களிடம் நேரடியாகச் சென்று சேரவேண்டிய நிதி. அது வேறு எந்தவகையிலும், வேறு யாரும் கொடுக்க மாட்டார்கள். ஆனால். அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டிய ஒரு service–ஓ,

*2023 ஏப்ரல் 17*]

*பணியோ அல்லது அரசுக்குச் செலுத்த வேண்டிய ஒரு நிதியோ, இதனை மிகச் சுலபமாக, மிக எளிமையாக* online*-ல் செய்வதற்கு அனைத்து வாய்ப்புகளும் இருக்கின்றன.*

*தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே கூடுதல்* Internet penetration, Smartphone penetration *வைத்திருக்கிறது. அனைத்து மக்களும்* online*-ல் செய்ய முடியாது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்காகவேதான் யாருக்கெல்லாம் முடியவில்லையோ, அவர்களுக்கெல்லாம் வீடுகளுக்குச் சென்று செய்கிறோம்.* Pension*-க்கு,* Registration*-க்கு, மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வி போன்று எல்லா நிதித் துறை செயல்களையும், ஒன்று,* online *அல்லது நேரடியாகச் செய்யத் திட்டமிட்டிருக்கிறோம். அதற்கும்மேல் எங்கெல்லாம் தேவையோ, உறுதியாகச் செய்து கொடுக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

*வினா வரிசை எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**168—**

### பால் குளிரூட்டும் நிலையம்

***3106—திரு. ஓ.எஸ். மணியன்:**

*மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேதாரண்யம் தொகுதியில் பால் பண்ணையும், தலைஞாயிறு பேரூராட்சியில் பால் குளிரூட்டும் நிலையமும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*